Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 02 சனிக்கிழமை (15-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 168

## நாளை மறுதினம் மாகாண சபைத் தேர்தல்:

# நாட்டின் தென்பகுதி முழுதும் பாதுகாப்பு ஏற்பாடு உஷார்!

## ஊர்வலம், கூட்டங்களுக்கு தடை

கொழும்பு, மே 15

நாளை மறுதினம் திங்கட்கிழமை ஏழு மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெற இருப்பதால், தென்பகுதி முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முக்கிய கட்சிகளுக்கு இடையே பலப்பரீட்சை நிலவுவதால், குழப்பங்களைத் தடுப்பதற்கு ஏதுவாக படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை 17 ஆம் திகதி தொடக்கம் ஒரு வார காலத்துக்கு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகவே அதிகரிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. கொழும்பில் இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டுரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து தற்பொழுது நீறுபூத்த நெருப்பாக இருக்கும் அரசியல் குரோதங்கள் விஸ்வரூபம் எடுக்கலாம் என அஞ்சப்படுவதால். ஆயுதப் படையினர் விழிப்புடன் செயற்படுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குழப்பங்களைத் தடுக்கும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக்கு புதிய பிரதிநிதி

யாழ்ப்பாணம், மே 15

செஞ்சிலுச்வைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக திரு பியட் சுவிஸ்ஸி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் பதவி ஏற்கவிருக்கிறார்.

தற்சமயம் கடமையாற்றும் திரு. சுவாங்கேயின் இடத்துக்கே இவர் நியனம் பெற்றுள்ளார்.

(ஓ 3)

## லலித்தின் ஆதரவாளர்களை ஆயுதபாணிகள் மிரட்டினர்!

குருநாகல் மாவட்டத்திலுள்ள மாவத்தகம தொகுதியில் கிராமம் ஒன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த ஆயுதபாணிகள் சிலர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்களை மிரட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

ஹைஏஸ் வாகனம் ஒன்றில் வந்த அவர்கள் வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து பயமுறுத்தல்களில் ஈடுபட்டனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ஜி.எம். பிரேமச்சந்திர நேற்று பொலீஸில் முறைப்பாடு செய்தார்.

(ஓ-6)

## பிரேமா மீது வசைபாடி கட்டுரை:

## 'ஏசியா வீக்' சஞ்சிகைக்கு ஸ்ரீலங்கா அரசு தடை!

கொழும்பு, மே 15

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை பற்றிய செய்திகள், படங்களுடன் வெளியான 'ஏசியாவீக்' ஆங்கில வார சஞ்சிகையை விற்பனை செய்வதற்கு கொழும்பு அரசு தடை விதித்துள்ளது.

பிரேமதாச ஜனாதிபதியகா இருந்த போது அரசியல் எதிரிகளைக் கொல்லும்படி உத்தரவிட்டிருந்தார் என்று அச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டிருந்ததே, இத்தடை உத்தரவுக்குக் காரணம் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

தப் மீது கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையைத் தோற்கடிக்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா லஞ்சம் கொடுத்து எம்.பிக்களை விலைக்கு வாங்கியதாகவும் இச் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது

தடுத்து வைக்கப்பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய நீதியரசர் இராமசாமி ராஜினாமா!

புதுடில்லி, மே 15

புதுடில்லி சுப்ரீம் கோர்ட் நீதியரசர் வி. இராமசாமி ராஜினாமாச் செய்தார்.

இவர் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இவரைப் பதவி நீக்கஞ் செய்யவேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பிரேரணை அண்மையில் லோகசபையில் போதுமான வாக்குகள் பெறாத காரணத்தால் தோல்வியடைந்தது தெரிந்ததே.

இப் பிரேரணைக்கு ஆதரவாக 198 வாக்குகள் கிடைத்தன. எதிர்த்து ஒரு வாக்கும் அளிக்கப்படவில்லை. சபையில் அச் சமயம் இருந்த 207 காங்கிரஸ் எம்.பிக்கள் வாக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பதவியில் இருந்து ராவ் விலக வேண்டும்

### அதிருப்தியாளர்கள் கோரிக்கை

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியில் இருந்து பிரதமர் பி.வி. நரசிம்மராவ் விலக வேண்டும் என்று கட்சியின் அதிருப்தியாளர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுப்ரீம் கோர்ட் நீதியரசர் வி. இராமசாமியை பதவி விலக்கக் கோரி எதிர்க்கட்சிகள் [பா]ராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணையை இந்திரா காங்கிரஸ் எம் பிக்கள் ஆதரித்து வாக்களிக்காததால் ஆத்திரமடைந்த அதிருப்தியாளர்கள் நரசிம்மராவ் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

## இந்திய ஜனாதிபதியின் விஜயம் ஒத்திவைப்பு

### இங்கு நிலைமை சரியில்லையாம்

கொழும்பு, மே 15

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் குழப்ப நிலை நிலவுவதால் விஜயம் ஒத்திவைக்கப்படுவதாக மத்திய அரசு வட்டாரங்கள் புதுடில்லியில் தெரிவித்தன.

எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதி இந்திய ஜனாதிபதி டாக்டர் சர்மா இலங்கை வந்து மிகுந்தலை சம்பு தாவ கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதாக இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலைக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்ய இந்திய ஜனாதிபதி ஒப்புக்கொண்டிருந்தார்.

## லலித் கொலை விவகாரம்:

## கிருலப்பனை பொலீஸாரின் காவலில் இருந்தவர் ரகுநாதன்

கொழும்பு, மே 15

எதிரணித் தலைவர் லலித் அத்துலத் முதலியை கொலை செய்தவர் என்று பொலீஸார் சந்தேகித்த கந்தையா ரகுநாதன் கிருலப்பனைப் பொலீஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்.

லலித் கொலை சம்பந்தமான விசாரணையை நடத்தி வரும் கொழும்பு மேலதிக நீதிவான் எம். ஏ. சில்வாவிடம் இத்தகவல் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா நேற்று நீதிமன்றத்தில் மேலதிக நீதிவானைச் சந்தித்து கந்தையா ரகுநாதன் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்,

கந்தையா ரகுநாதன் கனடா செல்லும் நோக்குடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்திருந்தார். விசா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அவர் கொழும்பில் தங்க நேர்ந்தது. அப்போது கிருலப்பனைப் பொலீஸார் ரகுநாதனைக் கைது செய்து காவலில் வைத்தனர்.

லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்படுவதற்கு முதல் நாளும் ரகுநாதனின் தாயார் அவரை கிருலப்பனை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு வழங்க வேண்டாம் என உத்தரவிடவில்லை

### பொலீஸ் மா அதிபர் மறுப்பு

கொழும்பு, மே 15

லலித் அத்துலத் முதலி கொலையுண்ட கிருலப்பனைக் கூட்டத்திற்குப் பாதுகாப்பு வழங்கவேண்டாம் என்று கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிடப்படவில்லை.

இவ்வாறு பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

கிருலப்பனைக் கூட்டத்துக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டாம் என்று பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டிருந்தார் என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை மறுக்கும் வகையிலேயே பொலீஸ் மா அதிபர் இந்த அறிக்கையை விடுத்தார்.

## பிரேமாவுடன் தற்கொலையாளி 6 தடவைகள் சுற்றுப் பயணம்!

### ஹெலியிலும் கதிர்காமம் சென்று வந்தாராம

கொழும்பு, மே 15

ஜனாதிபதி பிரேமதாசாவை வெடிகுண்டு மூலம் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் குலவீரசிங்கம் வீரக்குமார், பிரேமதாசா மேற்கொண்ட ஆறு தனிப்பட்ட சுற்றுப்பயணங்களின் போது அவருடன் கூடச்சென்றிருக்கிறார்.

பிரேமதாசா கொலை குறித்து பொலீஸார் நடத்தி வரும் விசாரணையின்போது இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாம்.

பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு உதவியாளர் மொஹிதீனுடன் மிக நெருக்கமான நட்புக் கொண்டிருந்தன் மூலம் வீரக்குமார் [illegible] ரால் பிரேமதாசாவுடன் கூடச் செல்ல முடிந்தது என்று பொலீஸார் கருதுகிறார்கள்.

பிரேமதாசா மேற்கொண்ட ஆறு தனிப்பட்ட விஜயங்களின்போது வீரக்குமார் கூடச் சென்றிருக்கிறார். அவற்றில் ஒன்று கதிர்காம யாத்திரையாகும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கதிர்காம யாத்திரையின் போது பிரேமதாசா ஹெலிக்கொப்டர் ஒன்றில் பயணம் செய்தார். அடுத்த ஹெலிக்கொப்டரில் மொஹிதீன், மற்றும் ஒரு பாதுகாப்பு உதவியாளர் ஆகியோருடன் வீரக்குமாரும் கூடச் சென்றிருக்கிறார்!

பிரேமதாசா சென்ற ஹெலிக்கொப்டரிலேயே கூடச் செல்வதற்கு வீரக்குமாருக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பிரேமதாசா அப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ரோம் நகர ஆஸ்பத்திரியில் அன்னை திரேசா

ரோம், மே 15

அன்னை திரேசா மூன்று விலா எலும்புகள் முறிந்த நிலையில் நேற்று ரோம் நகர மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் கீழே விழுந்ததனால், விலா எலும்புகள் முறிந்தன

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம. எண்ணெயுடன் 'நில்கிரி' சில தினங்களில் வரும்

யாழ்ப்பாணம், மே 15 மற்றொரு தொகுதி மண் எண்ணெய் பரல்களுடன் 'நில்கிரி' கப்பல் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்கு மாதா மாதம் ஒதுக்கப்படும் 5 ஆயிரம் பரல்களில் ஆயிரத்து 700 பரல்கள் முதல் தொகுதியில் எடுத்துவரப்பட்டிருந்தன.

இரண்டாவது தொகுதி மண்எண்ணெயே விரைவில் எடுத்துவரப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. (ஒ-3)

---

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்

## வருடாந்த வைகாசிப் பெருவிழா

இடம் : ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முன்றில்
காலம் : 16 - 05 - 1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8 மணி — மாலை 6 மணி வரை

மங்கள இசை : பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள்

தலைவர் : பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

முதன்மை விருந்தினர்: திரு. ந. யோகசிகாமணி
(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள் :

திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அவர்கள்
திரு. செ. பத்மநாதன் அவர்கள்
(யாழ் திட்டப் பணிப்பாளர்)
திரு. வி. செ. சுவாமிநாதன் அவர்கள்
(பிரதித்திட்டப் பணிப்பாளர்)

வாழ்த்துரை : துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பண்ணிசை : துர்க்கா துரந்தரி மகளிர் இல்ல மாணவிகள்

உரை அரங்கம்

| நிகழ்த்துவோர் | விடயம் |
|---|---|
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் | 'முருகனும் தமிழும்' |
| திரு. ச. விநாயகமூர்த்தி | 'ஆய்வும் வேண்டுங் கொல்லோ' |
| திருமதி மனோன்மணி சண்முகதாஸ் | 'கிழவியும் குழவியும்' |
| திரு. க. நாகேஸ்வரன் | 'வேலுண்டு' |

விருது வழங்கிக் கௌரவித்தல்
வழங்குபவர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள்
(பேரவைத் தலைவர்)

| பெறுவோர் | விருது |
|---|---|
| க. முத்துவேலு அவர்கள் | 'ஞானபண்டித இயலரசு' |
| செ. குமாரசமி அவர்கள் | 'ஞானபண்டித இசையரசு' |
| க. தணிகாசலம் அவர்கள் | 'ஞானபண்டித ஆய்வரசு' |

இன்னிசைக் கச்சேரி

சங்கீத பூஷணம்
திரு. செ. குமாரசாமி (வரதராஜன்) அவர்கள்
(பக்க வாத்தியம் சகிதம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

குறிப்பு அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்படும்.

— பேரவையினர்

[25673]

---

## இன்று

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்விப் பயிற்சி அளிப்புத்திட்ட நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-18)

o o o

யாழ். திருச்சபை நற்செய்திக் கழகம் வழங்கும் திருமறைக் கண்காட்சி யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

o o o

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 1993ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றியீட்டிய தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று மாலை 6 மணிக்கு மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும். [க-117]

## நாளை

வலிகாமம் வடக்குப் பிரதேச பரியோவான் முதலுதவிப் படை உத்தியோகத்தர்களுக்கான நியமன சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

## ஆலயங்களில்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வைகாசி சங்கிராந்தி பூசை வழிபாடு இன்று சனிக்கிழமை நடைபெறும். (க-30)

o o o

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

12 தினங்கள் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் தினமும் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தினசரி இரவு 8 மணி முதல் 10.30 மணி வரை இலக்கிய விழாவும் இடம்பெறும். (இ-3)

---

யாழ்/விக்ரோறியா கல்லூரி,
சுழிபுரம்.

## முறைசாராக்கல்வி

சுருக்கெழுத்து,
தட்டெழுத்து (ஆங்கிலம்)

க. பொ. த. (சா.த) சித்தியுடன் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றோர் மேற்படி பயிற்சி நெறியில் சேர்க்கப்படுவர். உடனடியாகச் சமுகமளிக்கவும்.

அதிபர்

[5923]

---

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

மானிப்பாய் சில்வர்ஸ்ரார் வி க அதிஷ்டலாபச் சீட்டு முடிவு 27.06.1993க்கு பிற்போடப்பட்டுள்ளது.

| தலைவர்: | செயலாளர்: |
|---|---|
| ஜெ. கருணாகரன் | இ. ஜெயசீலன் |

[25680]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

## யாழ். கிளை மன்ற ஆண்டுப் பொதுக் கூட்டம் - 1993

மேற்படி கூட்டம் 16.05.93 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரிவுப் பிரதிநிதிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
14.05.93

(சி/5129)

---

## கண்ணீர்ப் பூக்கள்

எமது கல்லூரி இந்து மாமன்றம், உயர்தர மாணவர் மன்றம் ஆகியவற்றின் தலைவரும், வணிக மன்ற உறுப்பினரும், மாணவ முதல்வருள் ஒருவருமான மகிந்தனின் அன்புத் தந்தையார்,

### இ. சடாட்சரம்

அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு எமது உள்ளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் பிரிவால் துயருறும் எமது நண்பன் மகிந்தனுக்கும், குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

இந்து மாமன்றம்,
உயர்தர மாணவர் மன்றம்,
மாணவ முதல்வர் மன்றம்,
வணிக மன்றம்.

கிறீஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.
15-05-93.

[25676]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### மாணிக்கம் வள்ளிப்பிள்ளை

தோற்றம்: 20 - 03 - 1932
மறைவு: 22 - 04 - 1993

அன்பின் அம்மாவே!
உங்களை மறக்க முடியாது தவிக்கும்.

மா. தர்மலிங்கம்
(மகன்)

புதுத் தோட்டம்,
துன்னாலை மேற்கு.

(சி/5130)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
20
04
1922

●

மறைவு:
27
05
1992



### திருமதி பெரியதம்பி அன்னம்மா

பண்புடன் எமை வளர்த்த
பாசமிகு அம்மாவே
அன்புடன் அமுதமொழி பேசி
ஆசைக்கரம் நீட்டி, எங்களையெல்லாம்
ஆளாக்கிய எம் அருமைத் தெய்வமே
பார்விட்டு நீங்கள் சென்று
ஓராண்டு ஆனாலும்
எங்கள் உயிர் உள்ளவரை
அகலாது உங்கள் நினைவு

உங்கள் பிரிவால் துயருறும்
மகன்:- P. சண்முகலிங்கம்
P. பரமநாதன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சந்திரன் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(6185)

---

உ
விராட் விஸ்வப் பிரமனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசித் திங்கள் 3 ஆம் நாள் (16-05-1993) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.08 மணிமுதல் 12.34 மணி வரையுள்ள பூரட்டாதி நட்சத்திரமும், சித்தாமிர்தமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது மகன் திருநிறை செல்வன் **உதயச்சந்திரன் (குமார்)** அவர்கட்கும் | எமது மகள் திருநிறை செல்வி **ரூபசவுந்தினி (சவுந்தினி)** அவர்கட்கும் |

ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் துணைகொண்டு திருமணம் சுவிஸில் இனிதே நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| திரு. திருமதி மாணிக்கவாசகர் குடும்பத்தினர் சொர்ணவடலி லேன், கொக்குவில் மேற்கு. | திரு. திருமதி தங்கராசா குடும்பத்தினர் சந்தை வீதி, உடுப்பிட்டி |

(25[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்று மேடைகள் கருகுகின்றன

# பம்பாய் வெங்காய உற்பத்தி

# அராலியில் அழியும் ஆபத்து

அராலி, மே 15

கடும் வரட்சியால் அராலியில் பம்பாய் வெங்காய நாற்று மேடைகள் அழிந்து வருகின்றன.

அராலியில் நெற்சாகுபடிக்கு அடுத்ததாக ஏறக்குறைய 150 ஹெக்ரர் பரப்பளவில் முன்னர் பம்பாய் வெங்காயம் பயிர் செய்யப்பட்டு வந்தது.

ஆனால் இப்போகத்தில் 15 ஹெக்ரர் பரப்பளவில் மட்டும் பம்பாய் வெங்காய பயிர் செய்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான நாற்று மேடையும் போடப்பட்டுள்ளது

தற்போது கடும் வரட்சியால் நாற்று மேடைகள் அழிந்து போகும் நிலையில் இருப்பதால், பம்பாய் வெங்காயச் செய்கை முற்று முழுதாக அழிந்து போகும் நிலை உருவாகி இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(இ-12)

## கொள்ளை

கொழும்பு, மே 15

வவுனியா நகரசபைக்கு வரிப்பணமாக செலுத்த ஒருவரால் கொண்டு வரப்பட்ட 19 ஆயிரம் ரூபா பணம் இனந்தெரியாதோரால் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டது என்று முறையிடப்பட்டுள்ளது. (த-எ)

## இடம் பெயர்ந்தோருக்கு உலர் உணவு முத்திரை

### சங்கானை உ. அ. அதிபர் பிரிவில்

வலிகாமம் மேற்கு, மே 15

தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்தும்—

வெளிமாவட்டங்களில் இருந்தும்—

இடம் பெயர்ந்து வந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோக முத்திரைகள் வழங்கப்பட உள்ளன.

இந்த மாதம் முடிவடைவதற்குள் இவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது

'இ' அட்டையுள்ள மதிப்பீட்டுப் படிவத்தை பூரணப்படுத்திய குடும்பங்களுக்கு மட்டுமே முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

(இ-175)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 15

இதுவரை மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (த)

## நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 15

ஈழத்துத் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை அமரர் சி. இராமலிங்கம் அவர்களின் 4ஆவது நினைவு தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-45 மணிக்கு கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரியில் நடைபெறும். (க)

## விசேட லீவு

கொழும்பு, மே 15

மாகாணசபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடும்போது நிரந்தர அங்கவீனம் அற்ற முறையில் காயமடையும் அரச ஊழியர்களுக்கு விசேட வைத்திய சிகிச்சை பெறுவதற்குரிய வகையில் 6 மாத கால விசேட லீவு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

(இ-எ)

## தமிழ் டாக்டருக்கு உயர் பதவி

லண்டன், மே 15

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் பரமசிவம் சிவகுமார் வட லண்டனிலுள்ள லியூரன் அன்ட் டன்ஸ்ரபின் ஆஸ்பத்திரியில் குழந்தை வைத்திய ஆலோசகராக நிரந்தரமான பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்

யாழ். பரியோவான் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்ற டாக்டர் சிவகுமார் லண்டனில் மேற்படிப்புப் படித்து ஆஸ்திரேலிய மெல்போன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டவர் ஆவார். (க)

## தொழுநோய் ஆய்வு

யாழ்ப்பாணம், மே 15

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. ரி சிவபாதம் தலைமையில் தனங்கிளப்புக் கிராமத்தில் இன்று சனிக்கிழமை தொழுநோய் ஆய்வு மேற்கொள்ளப்படும். (க-18)

## எதிர்க்கவில்லை

கொழும்பு, மே 15

தமிழ் பேசும் மக்களுக்கு மாகாணசபை முறை கிடைத்ததை நவசமசமாஜக் கட்சி ஒருபோதும் எதிர்க்கவில்லை.

இக் கட்சியின் தலைவர் வாசுதேவநாணயக்காரா மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்தார்.

[illegible]

---


## பதவி வெற்றிடம்

*பதவி:* சங்கீத ஆசிரியர்

*தகைமை:* பல்கலைக்கழகப் பட்டம் (சங்கீதம்)

*வேதனம்:* கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும்.

*விண்ணப்ப இறுதித்திகதி:* 31 - 05 - 1993

*விண்ணப்ப விலாசம்:* அதிபர், நவீல்ட் பாடசாலை, கைதடி.

(சி-5111)



JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI.

## மரவேலை கட்டட வேலை
# பயிற்சி நெறிகள்

அகில உலகப்பகயர் ஸ்தாபனத்தின் [Care International] உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

*காலம்:* 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுநர்க்கு:

1. நாளாந்த ஊக்குவிப்புப்படியாக ரூபா 30/- வழங்கப்படும்.
2. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.
3. பயிற்சி முடிவில் இலவச உபகரண பொதி.

ஆர்வமுள்ள ஆண்/பெண் விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக்கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 24 — 05 — 1993
நேர்முகப் பரீட்சை: 27 — 05 — 1993
முற்பகல் 9 மணி

— பணிப்பாளர்.

(சி-5184)



இணுவில்
பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்

## ★ மஹோற்சவம் ★

*15-05-1993 தொடக்கம் 26-05-1993 வரை நடைபெறும்.*

| | |
|---|---|
| 15-05-1993 | கொடியேற்றம் நண்பகல் 12 மணி |
| 16-05-1993 | கைலாசவாகனம் இரவு 6-00 மணி |
| 20-05-1993 | மஞ்சத்திருவிழா இரவு 6-00 மணி |
| 23 05 1993 | சப்பரத்திருவிழா இரவு 6-00 மணி |
| 24 05 1993 | தேர்த்திருவிழா பகல் 8-00 மணி |
| 25 05-1993 | தீர்த்தோற்சவம் மாலை நடைபெறும். |
| 26-05-1993 | பூங்காவனத் திருவிழா, திருக்கல்யாண வைபவம் இரவு 7-00 மணிக்கு நடைபெறும். |

தினமும் இரவு 8 மணிக்கு மஹோற்சவகால இலக்கிய விழா நடைபெறும்.

(25670) - திருவிழா உபயகாரர்கள்.



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## லியோ கழகத்தினர்
## ஜெய்ப்பூர் கால்
தொழிற்சாலை நிதி உதவிக்காக
வழங்கும்

# ★ கலை நிகழ்ச்சி ★

குழந்தை ம. சண்முகலிங்கத்தின்
*யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் வழங்கும்*

நாடகம்: "உறவுகள்"

✶ வயலின் சோலோ
*நாச்சிமார் கோவிலடி*
ஜெயராமன் குழுவினர்

*காலம்:* 1993 — 05 — 16 ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:* 3-30 மணி
*இடம்:* கைலாசபதி கலையரங்கம் யாழ். பல்கலைக்கழகம்.

பிரவேசம்: 100/-, 50/-, 20/-

(6179)



# தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு கல்வித் தகைமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

★ மொழிபெயர்ப்பாளர்கள்:
ஆங்கிலம் — தமிழ்
சிங்களம் — தமிழ்

★ மொழிபெயர்ப்பாளர்கள்:
தொழில்நுட்பம்
இயந்திரவியல்

★ அச்சுக்கோர்ப்பாளர்கள்:

★ ஓவியர்கள் (வயது 18 30)

விண்ணப்ப முடிவு திகதி: 23 — 05 — 1993க்கு முதல்

*விளம்பர இலக்கம்:* 527,
C/o உதயன்

(2 668)



## பிரத்தியேக வகுப்புகள்

A/L - இந்து நாகரிகம் - இந்துசமயம்
G. A Q. - (வெளிவாரி)

A/L — இந்து நாகரிகம் 93 94 95
A/L — இந்து சமயம் 93 94 95

*இந்து நாகரிகம் - இந்து சமயம் - (வினா, விடை வகுப்புகள்)*

G. A. Q. (*வெளிவாரி யாழ்ப்பாண, பேராதனை பல்கலைக்கழகங்கள்* )

*ஆசிரியர்:* சிவ. மகாலிங்கம்
(B A - Dip - in - Education M A Q - இந்து நாகரிகம்)

இடம்: கொக்குவில் வீதி. திருநெல்வேலி, (மருத்துவக் கல்லூரிக்கு, கிழக்குப் பக்கம்)

(25666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

T. V. டெக், ஒறிஜினல் பட வீடியோ கஸெட்டுக்கள் விற்பனைக்குண்டு. இராசா டீசல் எஞ்சினிஜர்ஸ், 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6173)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25494)

### மில் விற்பனைக்கு

இரண்டு Wilco கிரைண்டர், சோமசிறி, No 7 ஆகியன விற்பனைக்குண்டு. தனித் தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: யாழ். ரெக்ஸ், பிரசாத் வீதி, (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்) வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.

(6172)

### காணி விற்பனைக்கு

சுன்னாகம் ஊரெழு எல்லையில் 35 பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. அதற்கு அருகாமையில் 10 பரப்பு கல்லுக்கிளப்பாத தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 12, மே/பா உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(5921)

### தேவை

அலுமினியத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிவதற்கு அனுபவமும், ஆற்றலும் உடையவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். இல. 902, மே/பா உதயன்.

(6178)

ரீ மேக்கர், உணவு தயாரிப்பவர்கள் உடன் தேவை. விவரங்களுக்கு நேரில் சந்திக்கவும். நியூ மலாயன் உணவகம், இல. 625; ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(25667)

### தவறிவிட்டது

வெங்கடாசலம் இராசரத்தினம் ஆகியவரது அடையாள அட்டை (இல. 310750174V) மல்லாகத்துக்கும், சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாகம், கருணா பேக்கவுஸில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி-4759)

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மற்றும் சுபமங்களா, சமனம், விருட்சம், குன்றின் குரல் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விவரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், (புதிய பஸ்நிலையம் முன்) யாழ்ப்பாணம்.

(6177)

### வகுப்புகள்

க. பொ. த. சாதாரண உயர்தர மாணவர்களுக்கும், ஆரம்ப மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கணக்கியல் அனுபவமுள்ள விரிவுரையாளரால கற்பித்துத் தரப்படும். இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25664)

### பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesa lingam என மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(25537)

### இலவச திருமண சேவை

30 வயது, றோமன்கத்தோலிக்க, பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனம் உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(25604)

37 வயது, ஆயிலியம், சுவிஸில் வேலை புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். பொருத்தமான மணமக்களுக்கு நாடுங்கள்: ஞாயிறு. காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25606)

### றோணியோ

நாறு இரண்டு பக்க றோணியோ பிரதிக்கு 30ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-4755)

## பாரதிதாசன்

**கல்வி நிறுவனம் (BECON)**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் படிப்புகள்

**G. A. Q**
1994 ஏப்ரல்

**B. A.**
1994 ஏப்ரல்

பொருளியல்
**S. வரதராஜன்**
B. A. (Hon.)

ஆரம்பம்:
**16 - 05 - 1993**
ஞாயிறு 1·00 p.m.

(சி-4993)

## புதிய தொழில் பயிற்சிநெறி

**RADIO - T. V. & DECK**

★ விசேட செய்முறைப் பயிற்சிகள்.
★ இலகு விரிவுரைகள்.
★ துரித பயிற்சி நெறி.

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. PETER'S LANE,
JAFFNA. (சி-4757)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
06
—
07
—
1901



மறைவு:
14
—
04
—
1993

### கதிரவேலு செல்லப்பா

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து. நாம் வாழ வழிகாட்டி, மருதடி விநாயகர் தேர்த்திருவிழா அன்று இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

சகோதரர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
சங்கானை. (சி-4756)

## 'ஷப்றா' கிண்ணத்துக்காக ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

நடத்தும்

**மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்**
**கிரிக்கெட் போட்டித்தொடர் - 1993**

யாழ். இந்து மைதானத்தில்

அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை

★ ஷப்றா எதிர் சென்றலைட்ஸ் (சொக்ஸ்)
★ ஜொலி ஸ்ரார்ஸ் எதிர் சென்றலைட்ஸ் (புளூஸ்)

இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை

அனைவரும் வருக!

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
10
—
06
—
1967



உதிர்வு:
14
—
05
—
1993

### குலசிங்கம் சிவகுமார்

(3ஆம் வருட விஞ்ஞானபீட மாணவன்)

பல்கலை வாழ்வின்
பசுமை நினைவுகள் எமக்குள்
பற்றி எரிகின்றது
நம்ப முடியவில்லை
நண்பனே சிவா!
நான்கு மாதங்கள்தானே
இன்னும் பல்கலைப் படிப்பு என்றோம்
சொல்லி நான்கு நாட்களுக்குள்......
நம்ப முடியவில்லை
எங்களின் வாழ்வினில்
ஏனித்த வேதனை
கண்களில் நீர் வழிய
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வடமராட்சி-
சக மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

[25665]

## மாவீரர் படிப்பகம்

தமிழீழ மக்களின் கல்வி வளர்ச்சிக்கென
ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வரும்

**பொது நூலகம் இது.....**

சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் தமது கல்வியறிவை வளர்க்கும் பொருட்டு பலதரப்பட்ட துறைசார் நூல்கள், கதைகள் ஆகியவற்றுடன் உள்ளூர் சஞ்சிகைகள், மற்றும் வெளியூர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றை வாசித்துப் பயன் பெறக் கூடிய வகையில் செயற்படுகிறது.

சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதி,
உடனுதவும் பகுதி
ஆகிய பிரிவுகளினூடு
தமிழீழ மக்கள் யாவரும்
பயன் பெற செயற்படும்
**நூலகம் இது**

முகவரி:
பலாலி வீதி,
கோண்டாவில்.

(25651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றங்கள்

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு எதனையும் முன்வைக்காமல், தத்தமது கட்சிகளின் நலனுக்காக கண்ணாமூச்சி விளையாடி வந்த பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டினதும் போக்கில் சற்று மாற்றம் தெரிகிறது.

மென்மையானவர்; மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பவர்; முடிவு எடுக்க இயலாதவர் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் டி. பி. பதவியேற்றதும், இனப்பிரச்சினை விடயத்தில் அரசின் போக்கில் மாற்றம் இருக்காது என்று அறிவித்தார்; "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற போக்கில் பிரேமாவைப் பின்பற்றுபவர் போல தன்னைக் காட்டிக் கொண்டார்.

ஆனால் அடுத்த சில நாட்களில் அவரின் போக்கில் சற்று மாற்றம் தெரிந்தது.

"இனப்பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காணவேண்டும் என்பதில் நான் அக்கறையாக உள்ளேன். அதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடனும் நேரடியாகப் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்"—என்றார்.

வடக்கு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை, நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் வகையில் நீக்குவது குறித்து ஆலோசனை நடத்தி முடிவு அறிவிக்கவும் தாம் தயார் என்றார்.

வெறும் மேனிமினுக்குப் பேச்சுக்களைப் பேசி காலத்தைக் கடத்திய பிரேமதாசா போலல்லாது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உண்மையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை டி. பி எடுப்பாரா என்பது அடுத்துவரும் நாட்களில் கோடிட்டுக்காட்டப்படலாம்.

இது அரச தரப்பு நிலை. மறுபுறத்தில் தீர்வுக்குத் தமது யோசனை எதனையும் முன்வைக்காமல்— ஆளுங்கட்சிக்கும் சிங்கள மக்களுக்கும் பிடிகொடுக்காமல் நழுவி வந்த பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீ. ல. சு. கட்சியின் போக்கிலும் சற்று மாற்றம்.

"தற்போதைய மகாணசபை முறை பிரச்சினைக்குத் தீர்வாகாது. வடக்கு - கிழக்கில் இந்த முறை செயல்படவே இல்லை.

"தற்போதைய முறையை கூடுதலான திறமையான அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய அறிவு பூர்வமான ஒன்றாக மாற்றுவோம்" —என்று சு கட்சியின் தலைவி சிறிமா குறிப்பிட்டிருக்கிறார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சுதந்திரக்கட்சி தெரிவிக்கும் மாற்று வழி என்ன?" என்று கேட்கப்பட்ட போதே அவர் இப்படி பதிலளித்திருக்கிறார்.

கிழக்கு மாகாண சிங்களப் பகுதிகளை வடமத்திய மாகாணத்துடன் இணைப்பது உட்பட பல்வேறு ஆரம்ப யோசனைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிமாவின் யோசனைகளில் இடம் பெறக்கூடிய அடிப்படை விவரங்கள் தமிழருக்கு ஏற்புடையனவா என்பது ஒருபுறமிருக்க—

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மாற்று வழி ஒன்றின் ஆரம்ப நிலை பற்றி கருத்து வெளியிடக்கூடிய நிலைக்கு சு. கவின் தலைமைப் பீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பது புதியதோர் அறிகுறி.

தீர்வு காண்பதாக முன்வைக்கப்படும் திட்டங்களை வெறுமனே விமர்சித்துக் கொண்டிருக்கும் நிலையை விட்டிறங்கி—

தமது சார்பில் — தமது கட்சியின் சார்பில்— தீர்வுக்கான மாற்றுவழி பற்றிய அடிப்படை விவகாரங்கள் சிலவற்றைப் பிரஸ்தாபிக்கும் அளவிற்கும் சு. கவின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சிங்களக் கட்சிகளின் போக்கில் ஏற்பட்டுள்ள இம்மாற்றங்கள், தொடர்ந்து சரியான திசை நோக்கி மேலும் திரும்புமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

### கோப்பாய் பிரதேச செயலகம்:

## உணவு முத்திரையை உடன் விநியோகிக்க நடவடிக்கை

இடம்பெயர்ந்து வந்து கோப்பாய் பிரதேச செயலகத்தின் எல்லைப் பரப்புக்குள் தங்கியிருப்போருக்கான உலர் உணவு முத்திரைகள் உடனடியாக விநியோகிக்கப்பட உள்ளன.

தத்தம் பகுதியில் தங்கியிருப்போருக்கான உலர் உணவு முத்திரைகளை இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும்—

ஞாயிற்றுக்கிழமையோ விநியோகத்தை முடிக்குமாறும்...

பிரதேச செயலர் திரு. க. கனகரத்தினம் அப்பிரதேச கிராம அலுவலர்களைக் கேட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகம் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலருக்கும் அப்பிரிவில் கடமையாற்றும் சில கிராம அலுவலர்களுக்கும் இடையில் தகராறு இருந்து வந்தது.

இதன் காரணமாக கிராம அலுவலர்கள் கடந்த சில தினங்களாக வேலையை பகிஷ்கரித்து வந்தனர்.

நேற்றுக்காலை அப்பகுதி கிராம அலுவலர்கள் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போலுடனும், மாவட்ட பிரதி ஆணையர் திரு. து. வைத்திலிங்கத்துடனும் பேச்சுக்கள் நடத்தி இருந்தனர்.

பிரச்சினை குறித்து யாழ் அரச அதிபர் கொழும்பில் இருந்து திரும்பியதும் பேசலாம் என்றும்—

பொதுமக்களுக்கான சேவை தடைப்படாத வகையில் கடமையாற்றுமாறும்— அப்பேச்சுக்களின்போது பிரதி ஆணையாளர் கேட்டுக்கொண்டார். (இ-143-3)

### பாடசாலைகளில்

யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி பின்னல் மைதானத்தில் நடைபெறும்

## பருத்தித்துறை சேவையில் 'மரினால்' கப்பலும் ஈடுபடும்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான பொருள்களை எடுத்து வருவதற்கு 'மெரினால்' கப்பலையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முடிவு செய்திருப்பதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

'மெரினால்' கப்பல் கடந்த சில மாதங்களாக காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்குப் பொருள்களை எடுத்து வரும் சேவையில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இனி இந்தக் கப்பல் பருத்தித்துறைக்கு பொருள்களை ஏற்றிவரும் பணியில் ஈடுபடுத்தப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் சேவையில் ஈடுபட்டுவரும் குமண, குமாரி, வாதுவ ஆகிய கப்பல்களுக்கு புறம்பாக 'மரினால்' கப்பலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

"ஷப்றா" கிண்ணத்துக்காக ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ காலை 8-30 மணி:- ஷப்றா அணி எதிர் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி.

★ பிற்பகல் 1-30 மணி: ஜொலி ஸ்ரார்ஸ் அணி எதிர் சென்ரலைட்ஸ் (புளூஸ்) அணி.

வெற்றிபெறும் அணிகள் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டத்தில் கலந்து கொள்ளும். இறுதி ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்களைக் கொண்டதாக இருக்கும். இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் கலந்து கொள்வார்.

o o o

"உதயன்" கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ திரு இருதயம் அணி எதிர் நியூட்டன் வி. க. 'ஏ' அணி.

★ இளவாலை யங் ஹென்றீஸ் அணி எதிர் விபுலானந்தர் வி. க, அணி.

o o o

யாழ். றோட்டறக்ட் கழகம் "உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் வருடாந்த ஹொக்கிச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடைபெறும் இச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர் வரும் 21ஆம் திகதியாகும்.

o o o

வலிகாமம் தென்மேற்கு' சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் [illegible] விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான [illegible] போட்டிகள் நாளை காலை 8-30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. க, கனகராஜா, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சி. கேசவராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றுவர்.

o o o

யாழ் ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம், கழக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடக்கும் கால் இறுதி ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ முற்பகல் 8 30 - பாரதி இளைஞர் வி. க. அணி எதிர் அளவெட்டி யுத் வி க. அணி.

★ பிற்பகல 3.00 அடைக்கல அன்னை வி. க 'ஏ' அணி எதிர் நொதெண் வி. க. (வெள்ளை) அணி.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ யாழ். திருநகர் பாரதி வி க. எதிர் உடுவில் சென் மேரிஸ் வி க.

★ ஆனைக்கோட்டை அறிவொளி வி. க. எதிர் சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய வி. க. (உ)

## தொற்று நோய்

தற்போது யாழ் குடாநாட்டில் வீசும் கடும் காற்றினாலும் வெப்பத்தினாலும் சின்னமுத்து, அம்மை, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவ [illegible] வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

# தியோகுப்பிள்ளைக்கு கலைக் காவலர் பட்டம்

## நாட்டுக்கூத்து விழாவில்

குருநகர், மே 15

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் நாட்டுக்கூத்துக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியில், முன்னாள் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். "கலைக் காவலர்" என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

யாழ். திருமறைக்கலா மன்றம் கடந்த 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் பிரதான வீதி கலையரங்கில் நடத்திய நாட்டுக்கூத்து விழா மேடையில் வைத்து பொன்னாடை போர்த்தி, பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட மற்றும் நாட்டுக்கூத்து அறிஞர்கள், புலவர்கள், அண்ணாவிமார்களின் விவரம் வருமாறு:

### 7ஆம் திகதி

அனாசி அருளப்பு — நாரந்தனை, சின்னத்தம்பி அந்தோனி — பாஷையூர், திருமதி யோசெப் திரேசம்மா— கொழும்புத்துறை, குருசுமுத்து திருச்செல்வம்— மானிப்பாய், சுவாம்பிள்ளை தம்பித்துரை— ஆனைக்கோட்டை, நீக்கிலான் வின்சன்டிபோல்— நாவாந்துறை, ஆசிர்வாதம் மரியதாஸ்— குருநகர் கிழக்கு.

### 8ஆம் திகதி

அப்புக்குட்டி முருகவேள் வட்டுக்கோட்டை, டானியல் பெலிக்கான்— நாவாந்துறை, மலக்கியாஸ் சாமிநாதன்— குருநகர், நாகமுத்து சின்னத்துரை — அரியாலை, நா. தங்கவேலு — நாரந்தனை, செல்லப்பா நடராசா— வட்டுக்கோட்டை, சூசைப்பிள்ளை விகோரி சின்னக்கிளி— யாழ். மத்தியூஸ் வீதி, முத்தையா துரைசிங்கம் — குருநகர், செ. இருதயநாதர்— மண்டைதீவு, ஞா. ஞானப்பிரகாசம் — குருநகர், சூசைப்பிள்ளை யேசுதாசன்— யாழ். டேவிட் வீதி, புலவர் ஆசிர்வாதம் செகராஜசிங்கம்— பாஷையூர்.

### 9ஆம் திகதி

அண்ணாவிமார் பேக்மன் ஜெயராஜா— வளன்புரம், அந்தோனி பாலதாஸ்— பாஷையூர், வஸ்தியாம்பிள்ளை அல்பிரட்— பாஷையூர், சேவியர் செல்லத்துரை— யாழ் கதீற்றல் வீதி. (இ-51)

### பிரேமாவுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போத்த கொலையுண்டிருக்கலாம் என்று பொலீஸார் கருதுகின்றனர்.

ஏனைய ஐந்து சுற்றுப் பயணங்களிலும் பிரேமதாசா வகனத்தையே பாவித்தார் எனவும் தெரிய வந்துள்ளதாம். (அ)

### நாட்டின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்பாடாக தென்இலங்கையில் நேற்று நள்ளிரவு தொடக்கம் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் ஒரு வாரகாலத்துக்கு இத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்று பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நேற்று அறிவித்தார்.

இதற்கிடையில்—

தேர்தல் நடைபெறவுள்ள ஏழு மாகாணங்களிலும் நேற்று மட்டும் முக்கிய அரசியல் கட்சிகளின் பதினான்கு பெரிய பிரசாரக் கூட்டங்கள் நடைபெற இருந்தன.

நேற்று நள்ளிரவுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவடைய இருந்தன என்பது தெரிந்ததே. [ஒ-எ-6]

## தனியார் வானொலி

இலங்கையில் முதலாவது தனியார் வானொலி நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

பிலியந்தலையில் உள்ள நிலையக் கட்டடத்தில் 101.7 பண்பு அலையில் (எவ் எம்) இந்த நிலையம் விரைவில் காலையில் பரீட்சார்த்த ஒலிபரப்பை நடத்தவுள்ளது.

டி. என். எல். என்ற பெயரிலான நிறுவனமே இந்த வானொலி நிலையத்தை நடத்துகின்றது. [த-எ]

### சர்ச்சைக்குரிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களிப்பில் கலந்து கொள்ளவில்லை. குற்றப்பிரேரணை நிறைவேற 273 வாக்குகள் தேவைப்பட்டன.

இந்திய அரசமைப்பின் பிரகாரம் சுப்ரீம் கோர்ட் நீதியரசர் ஒருவரை பதவி நீக்கம் செய்வதானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

தீர்மானம் போதிய வாக்குகளைப் பெறத் தவறி உள்ள போதிலும் இராமசாமி தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார். (இ-எ)

மணிவிழா நாயகன்

இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கு

இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்

இனுவைப் பதிதந்த - சுடில்லாச் செம்மல் என்றும்
இன் முகத்தோடிலங்கி -
இன்சொல்லே வழங்கி நிற்போன்
கல்விக் கருந்தனத்தைக் - கண்ணெனவே காத்திடுவோன்
களங்கமில்லாச் சேவையினால் -
கற்றுயர்ந்தோர் உளம் மகிழ்ந்து
சுந்தரத் தமிழினில் சொல் மாலை சூட்டி நிற்கும்
சுந்தரலிங்கமென்னும் பெயர் சான்ற தகவுடையோன்
மணிவிழாக் கண்டுமே மகிழ்ந்து நிற்கும் இந்நாளில்
மக்காத புகழோங்கி வாழ்ந்திடவே வாழ்த்துகிறோம்.

நல் வாழ்த்து வழங்கி நிற்கும்:
யா/ புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
(6184)

K. C. C. C.

வெற்றிக் கிண்ணத்திற்கான

கிரிக்கெட் போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் மூன்றாவது ஆண்டாக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி: 22-5-93 (சனி)
போட்டி ஒழுங்கு தெரிவு: 23 5 93 ஞாயிறு பி ப 4 மணி

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி

விபரங்கட்கு
நிர்வாகம்
K C C C. விளையாட்டுக் கழகம்
(6186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

நேற்றைய பத்திரிகையில் ,''வன்னி மாவட்டத்தில் பணிபுரிய பயிற்சிபெற்ற பெண் தாதிகள் தேவை'' என்ற தலைப்பின் கீழ் இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நேர்முகத்தேர்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் 17. 05. 1993 அன்று நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(25679)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயலச்சுமி தம்பிஐயா

(மங்களம்)

கொக்குவில் புதுக்கோவிலடியைச் சேர்ந்த திருமதி ஜெயலச்சுமி தம்பிஐயா 12-05-1993இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் (பிரதான மேற்பார்வையாளர், புகையிரதப் பகுதி), வே. தம்பிஐயாவின் அன்பு மனைவியும், சறோஜினி தேவி, சீதாதேவி, பாலதேவன் (இளைப்பாறிய அதிபர், வயோதிபர் இல்லம் சமூக சேவைப்பகுதி), மகாதேவா (ஆராய்ச்சி நிபுணர், லண்டன்), கமலாதேவி, லச்சுமிதேவி (கனடா), சகாதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசிங்கம் (இளைப்பாறிய சிறுகைத்தொழில் பிரதான மேற்பார்வையாளர்), காலஞ்சென்ற வேலாயுதம் (சிறாப்பர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), கதிர்காமநாதன் (ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் நாயகம்), காலஞ்சென்ற ஜோர்ச் ஜெயராசன் (x கதிர்ப்பகுதி அரசினர் வைத்தியசாலை), தீபமணி, கமலாசினி (ஆசிரியை, லண்டன்), புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயதேவா, கௌரி செந்திநாதன், தர்மதேவா, யுவராஜன், ஜெயந்தி லக்ஸ்மன் திசா, சாந்தி ஜெயதீசன், ஆனந்தி, லிங்கராஜன், வேல்ராஜன், சித்திரா வரதராஜன், கெங்கா, அரவிந்தன், வைத்திய கலாநிதி ரவி மகாதேவா, கலாநிதி ஹரின் மகாதேவா, கமலநாதன், கீதா, அனுசியா, பரந்தாமன், அபிராமி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், காயத்திரி, ஜெனனி, சுஜாயினி, கவித்திரா, கேசவன், ரமணன், பிரசன்னா, தனுஷன், அபிலாத், சுரேன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், எம். எஸ். அரியநாயகம் (இளைப்பாறிய வைத்திலிங்கம் கொம்பனி), காலஞ்சென்ற S A. குணரட்ணம் (முகாமையாளர், இலங்கை விமானசேவை), M. S. மாணிக்கரத்தினம், M. S. பாலசுப்பிரமணியம் (சுவிற்சர்லாந்து), காலஞ்சென்ற ரஞ்சித பூசனி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (16-05-1993) ஜெயமங்களம், புகையிரத வீதி கொக்குவிலில் நடைபெற்று காலை 10மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. சகாதேவன் (மகன்).
''ஜெய மங்களம்'',
கொக்குவில்.

(25659)

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கைச் சேர்ந்த அப்பையா இராசநாயகம் 14-05-1993 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சீனியர் அப்பையா-சொர்ணம் தம்பதிகளின் மூத்தமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வநாயகத்தின் (கணேசன் அரிசி ஆலை) அன்புச் சகோதரரும், மயூரநாதன், ஜெயலக்சுமி, சற்குருநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்குணம், தயாவதி, பாமதி, செந்தில்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வநாயகம், மகாதேவன், நடராசா, சிவநேசம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜந், மாதுளன், பிரபாலினி, தினேஷ்குமார், சிந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. சற்குருநாதன்
(ஐங்கரன் அரிசி ஆலை)
இணுவில் தெற்கு.

(25669)

## இராசதுரை சடாட்சரம்

நீர்வேலி வடக்கு மாசுவனை சேர்ந்தவரும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் வீனஸ் தங்கமாளிகை உரிமையாளருமான இராசதுரை - சடாட்சரம் 13 - 05 - 1993 இல் காலமாகி விட்டார்.

அன்னார் ஜெகசோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை பாக்கியம் தம்பதிகளின் மகனும், இந்திராணி, கலாலோஜினி (கனடா), புவிச்சந்திரன் (வீனஸ் தங்க மாளிகை), புலேந்திரன் (சுவிஸ்), சதீஸ்வரன் (பல்கலைக்கழகம், கிளிநொச்சி), பிரதாபன் (பிரான்ஸ்), தனீஸ்வரன் (மாவீரன் 2ஆம் லெப். சின்ன அல்பேட்), மகிந்தன், கவிதாலோஜினி, நிகிர்தாலோஜினி, நிர்மலாலோஜினி, மதனறூபன், யசிந்தாலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், சரவணபவன் (கனடா), வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் (உரிமையாளர், அருள் 'முருகன் நகை மாளிகை), விமலபூசணி, காலஞ்சென்ற ஜீவகாருண்யம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15 - 05 - 1993 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவிச்சந்திரன் (சந்துரு)
நீர்வேலி வடக்கு.

(25663)

## 'ஏசியா வீக்'.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஏசியா வீக்'' சஞ்சிகையின் முன் பக்க அட்டையில் பிரேமதாசாவின் படம் 'பளிச்' என்று அச்சிடப்பட்டுள்ளது.

படுகொலையுண்ட பிரேமதாசா பற்றிய ஆறு பக்கக் கட்டுரை இச் சஞ்சிகையில் பிரசுரமாகி உள்ளது. பிரேமதாச கொடுங்கோலனாக அக் கட்டுரையில் வர்ணிக்கப்பட்டுள்ளார்.

அச்சுறுத்தல் என்னும் ஆயுதத்தை கையில் எடுத்து அரசோச்சியவராக பிரேமதாசா அக் கட்டுரையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

மக்களின் தலைவர் என்ற முகத்திரையில் பயங்கர ஆட்சி நடத்தியவர் என்று கட்டுரைக்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

தற்கொலையாளி ஒருவரின் கையால் அடைந்த மரணத்துடன் அரசியல் வன்சகாப்தம் ஒன்று முடிவுக்கு வந்ததாக அக் கட்டுரையில் விமர்சிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வரலாறு கொண்ட இலங்கைத்தீவின் பயங்கரம் நிறைந்த காலங்களில் பிரேமதாசா ஆட்சி நடத்திய காலமும் ஒன்று என்று ''ஏசியா வீக்'' தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இத்தகைய குற்றச்சாட்டுகள் புதியனவை அல்ல; ஆனால் பிரேமதாசா இறந்த பின்னரே இத்தகைய குற்றச் சாட்டுகள், விமரிசனங்கள் செய்தித் தாள்களில் வெளிவரத் தொடங்கி உள்ளன — என்று பி. பி. ஸி. கண்ணோட்டத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

''ஏசியா வீக்'' சஞ்சிகை இலங்கையில் தடை செய்யப்பட்டிருப்பது இது முதல் தடவை அல்ல; முன்னர் ஒரு முறை பிரேமதாசா சீற்றம் கொள்ளக் கூடிய கட்டுரை ஒன்றையும் ''ஏசியா வீக்'' வெளியிட்டிருந்தது.

''லண்டன் பக்கிங்ஹாம் அரச மாளிகையில் இளவரசர் சார்ள்ஸ் - டயானா சீமாட்டி திருமண வைபவத்தில் பிரதமராக பிரேமதாசா கலந்து கொண்டார், அப்போது அந்த வைபவத்தில் கலந்து கொண்டதற்கு நினைவுச் சின்னமாக சிறு பொருள்களை பிரேமதாசா திருடியிருந்தாராம்'' — இப்படி ஏசியா வீக் சஞ்சிகை முன்பு எழுதியது. இதன் மூலம் பிரேமதாசாவின் ஆத்திரத்திற்கு இச் சஞ்சிகை இலக்காகி இருந்தது — இப்படி பி. பி. ஸி. கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ரோம் நகர ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று பி.பி ஸி தெரிவித்தது.

இந்தியாவின் கல்கத்தா நகரை தலைமையகமாகக் கொண்டு சமூகப்பணி புரிந்து வரும் அன்னை திரேசா ரோம் நகரில் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளுவதற்காக சென்ற இடத்திலேயே விபத்துக்குள்ளானார் என்று பி.பி ஸி. தகவல் வெளியிட்டது.

[ஒ-எ]

## கிருலப்பனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் நிலையம் சென்று பார்த்துக் கதைத்துவிட்டுப் போனார்.—என்றும் சட்டத்தரணி தயா பெரேரா மேலதிக நீதிவானிடம் தெரிவித்தார்.

லலித் கொலையுண்ட அடுத்த நாள் காலை ரகுநாதனின் சடலம் கிருலப்பனை முதலன் வீதியில் காணப்பட்டது. அவரே லலித்தைக் கொலை செய்தார் என்று கற்பிக்கும் வகையில், பொலீஸாருடன் அரச பொதுசனத் தொடர்பு சாதனங்களும் பிரசாரம் செய்தன. அவரது கையில் பிஸ்டல் காணப்பட்டதாகவும், அவர் சயனையிட் அருந்தி தற்கொலை செய்தார் என்று வேளைக்கு வேளை முரண்பட்ட தகவல்களையும் பொலீஸார் தெரிவித்து வந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா எதிரணி ஆதரவாளர் என்பதும் விசேடமாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வழக்குகளில் அவரது தரப்பில் ஆஜராகுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

## யாழ். ஆஸ்பத்திரி வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 15

யாழ் ஆஸ்பத்திரியிலுள்ள முக்கிய ஜெனரேற்றர் ஒன்று பழுதடைந்து விட்டதால் நேற்று அங்கு வேலைகள் பாதிப்படைந்தன.

எனினும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மற்றொரு ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது.

அவசரமான சிகிச்சைகள் தடையின்றி நடந்தன.

உ
சிவமயம்

## இந்து இளைஞர் கொடிதின நிகழ்ச்சி

15 மே 1993

இடம்: நல்லை ஆதினம், நல்லூர்
காலம்: இன்று (15-05 1993) சனி முற்பகல் 9.30 மணி
திருமுறை ஓதுதல்: யாழ்/மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவிகள் நல்லூர்

ஆசியுரையும் கொடி வழங்கலும்
நல்லை குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

வாழ்த்துரை: சிவதர்மவள்ளல் கலாநிதி க. கனகராசா அவர்கள்
கொடிபெறுபவர்: திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் யாழ். மாநகர ஆணையாளர்
சிறப்புரை: கலாநிதி சிவஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன் தலைவர், இந்து நாகரீகத்துறை யாழ்/பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சுபம்

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவை
நல்லை ஆதீனம்,
நல்லூர்.

(சி 5128)

# மரண அறிவித்தல்கள்

## சந்தியா அருளப்பு

நவாலி தெற்கு புஷ்ப பவனத்தைச் சேர்ந்த சந்தியா அருளப்பு அவர்கள் 13-5-93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சந்தியா - கத்தறீனா தம்பதியரின் அன்பு மகனும், இன்னேசத்தின் அன்புக்கணவரும், மேரி றெஜீனா, கென்றி இதயராஜா (சவுதி), புளோறன்ஸ் ஜெபமணி (யாழ் அரசினர் பொது வைத்தியசாலை), லயனல் புஷ்பராஜா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அப்புத்துரை, இந்திராணி, அமிர்தநாயகம், மீனா ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரன் றெஜினோல்ட் (நோர்வே), அன்ரன் றொசெயின் (நோர்வே), அன்ரன் டொனால்ட், பிறின்சி திரேஸ், ஆன் சிறாணி, றொஷாந்தன் றோகான், றொஷானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். நல்லடக்கம் இன்று (15-5-93) சனிக்கிழமை காலை 8 மணிக்கு நவாலியில் நடைபெறும்.

தகவல்:
அ. இன்னேசம் (மனைவி)
புஷ்பபவனம்.
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி 5125)

## முருகையா விசாகப்பெருமாள்

முருகையா விசாகப்பெருமாள் 14-5-93 இல் காலமானார். கீரிமலையைப் பிறப்பிடமாகவும், ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட இவர் சந்தானலெட்சுமியின் அன்புக் கணவரும், விஜயசிறி, காலஞ்சென்ற கௌரிபாலன், சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகையா, செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், தம்பித்துரை, அருலாம்பிகை, இராசேஸ்வரியின் சகோதரரும், சர்வானந்தசிவம், சத்தியசீலன், சத்தியபாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (15-5-93) சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும் என அறியத் தருகிறோம்.

தகவல்:
சர்வானந்தசிவம் (மைத்துனர்)
ஏழு கோயிலடி,
ஏழாலை.

(25675)

## சின்னப்பு சிவசம்பு (செல்லத்துரை)

(வேலணை கிழக்கு)

வேலணை கிழக்கைச் சேர்ந்த சி. சிவசம்பு (செல்லத்துரை) 13 05 93 இல் கொழும்பில் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னப்புவின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு திருமதி க. சந்தையாவின் அன்பு மருமகனும், புனிதவதி, கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சிவகுமார் (கொழும்பு), செந்தில்ராசன் (ஜேர்மனி), உமேசர் (பிரான்ஸ்), பேரின்பவதி (ஜேர்மனி), ஜெயகௌரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரட்ணம், செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோன்மணி, காலஞ்சென்ற கமலாம்பிகை (கமலம்), திருநாவுக்கரசு கனகசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், க. யோகராசா (பிரான்ஸ்) வின் சிறிய தந்தையாரும், இ. சுந்தரலிங்கம் (வர்த்தகர், நிர்மலா ஸ்ரோர்ஸ், திருகோணமலை), சு. விக்கினராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாபரன், நிர்மலா, சிவபரன், பரிமளா, கிருபாகினி, பிரதீஸ், சுகீதரன், சுஜவர்ணா மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் பிரகாஸ், பிரதீப் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (15-5-93) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சுந்தரலிங்கம் (மருமகன்)
இல. 474, K. K. S. றோட்,
கொண்டாவில் மேற்கு

[25677]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org